29.12.82

உள்ளே:- "மார்க்ஸியமும், இலங்கைத் தமிழர் பிரச்சினையும் பற்றியதொரு சிறு ஆய்வு"

— வ.ந. கிரிதரன் —

அத்தியாயம் ஒன்று:- கம்யூனிஸ்ட்டுக்களும், கடவுளும் மதவாதிகளும், பரிணாமமும். (129-134).

அத்தியாயம் இரண்டு:- மார்க்ஸியமும் அதன் மீதான நாத்திகப் பயங்கரவாதம் பற்றிய குற்றச்சாட்டுக்களும். (135 - 138)..

அத்தியாயம் மூன்று:- மானுட வர்க்கப் பிரச்சினைகளும், அகஉணர்வுகளும் பற்றியதொரு கற்பனாவாதம். (138 - 140)..

அத்தியாயம் நான்கு:- புரட்சிகளும், புரட்சிகர எதிர்ப் புரட்சிகர சக்திகளும், (இலங்கைத் தமிழர் பிரச்சினை உட்பட). (140-).

121)

129)

29.12.82.

அத்தியாயம் ஒன்று:- "கம்யூனிஸ்ட்டுக்களும் கடவுளும், மதவாதிகளும் பரிணாமமும்":-

இன்றைய உலகின் நாடுகளைச் சற்றே கவனித்துப் பார்ப்போமாயின், ஒன்றினை நாம் மிக எளிதாகவே, எவ்விதச் சிரமமுமின்றி அறிந்து கொள்ளலாம்:- பொதுவுடமைத் தத்துவத்தில் நம்பிக்கை வைத்து, அதனையே கண்டிப்பாக அமுல் நடாத்தும் கம்யூனிஸ நாடுகள் ஒருபுறம்; முதலாளித்துவத்தின் கோரப்பிடிகளிற்குள் சிக்கிக் கிடக்கும் செல்வந்த நாடுகள் ஒருபுறம்; இவை தாமே தப்பிப் பிழைப்பதற்காக போராடும் மூன்றாம் உலக நாடுகள் இன்னுமொரு புறம்; இந்த மூன்றாம் உலக நாடுகளிலும் இருவகையான போக்குகள் காணப்படுகின்றன. ஒன்று கம்யூனிஸ நாடுகளின் பக்கம் சார்ந்த போக்கு; மற்றதோவென்றால் முதலாளித்துவக் கூடாரத்தின் பக்கம் சார்ந்த போக்கு. ஆனால் இந்த மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்தவரையில் முக்கியமானவை என்னவென்றால்... இவற்றின் பொதுவான அம்சங்களாக வறுமை, அறியாமை, நோய்கள் என்பவையே காணப்படுகின்றன; இந்நிலையில் இவை தங்களிற்குள் ஒன்றையொன்று முட்டி மோதிக் கொள்கின்றன; இதன் காரணமாக இவை தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்வதற்காகவே ஏதாவது ஒரு பக்கமாகச் சாய்ந்து கொள்கின்றன. இத்தகைய வறிய நாடுகளையெல்லாம் ஏழைகளாக உருவகிப்போமானால், செல்வந்த நாடுகளோவெனில் கோரத்தனமாக இந்நாடுகளை மேலும் மேலும் சுரண்டி வருகின்றன; இவ்வாறு முதலாளித்துவ செல்வந்த நாடுகளால் கோரத்தனமாகச் சுரண்டப்பெற்று வரும் இத்தகைய வறிய நாடுகளையெல்லாம் உள்ளே சென்று பார்ப்போமாயின்... அந்நாடுகளிலுள்ள முதலாளித்துவ வர்க்கச் சார்பான அரசுகளும், வர்க்கமும் அந்நாட்டுத் தொழிலாள வர்க்கங்களை மேலும் மேலும் கொடூரமாகச் சுரண்டி வருகின்றன. வாழ்வதற்குரிய அடிப்படை உரிமைகளே மறுக்கப்பட்ட நிலையில் பல்லாயிரக்கணக்கான, லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ஏழைமக்கள் கொடிய அடக்குமுறைகளிற்குள் உள்ளாக்கப்பட்டு வருகின்றார்கள். போற்றப்பட வேண்டிய பெண்மையோவெனில் தெருப் புழுதியில் புரண்டு கொண்டிருக்கின்றது. செல்வந்த முதலாளித்துவ நாடுகளிற்கும், வறிய நாடுகளிற்குமிடையில் எத்தகைய உறவு முறைகள் நிலவுகின்றனவோ, அதே மாதிரியான உறவு முறைதான், உண்மையில் அதனிலும் மிகவும் கொடியதான உறவுமுறைகளே இவ்வறிய நாடுகளின் முதலாளித்துவ வர்க்கங்களிற்கும் அந்நாட்டு வறிய மக்கள் வர்க்கத்தினரிற்குமிடையில் நிலவுகின்றது. 'பனையால் விழுந்தவனை, மாடேறி மிதித்தது போல' என்று தமிழில் ஒரு உவமைத் தொடர் உண்டு; அது இவ்வறிய நாடுகளின் முதலாளித்துவ வர்க்கங்களைப் பொறுத்தவரையில் மிகவும்

உண்மையான வார்த்தைகளே! செல்வந்த முதலாளித்துவ நாடுகளின் கொடிய சுரண்டல் நடவடிக்கைகளால் ஏற்கனவே முடங்கிக் கிடக்கும் கீழ்த்தரமான வறிய நாடுகளை, இம் முதலாளித்துவ வர்க்கமோ மேலும் மேலும் அதிகமாகவே சுரண்டி வருகின்றது; வர்க்க பூசலின் மேலும் மேலும் வேகமே பரவிச் வருகின்றது.

கல்வியில் கீழ்த்தரமான நாடுகளில் அடக்குமுறைகளிற்கெதிராகக் கிளர்ந்தெழும் வர்க்கங்களை மிகக் கொடுமையாக நசுக்கி வரும் அதேவேளையில், மற்றைய மக்களும் ~~ஏனைய வர்க்கங்களும்~~ கிளர்ந்தெழுந்து விடாதபடி இருக்கும் பொருட்டு, இந்த முதலாளித்துவ வர்க்கங்கள் என்ன செய்கின்றன வென்றால் இரண்டும் வர்க்கங்களிற்கேயுரிய பிரித்தாளும் கொள்கையைத் தான் இவை மிகத் தந்திரமாகப் பாவிக்கின்றன: இனம், மதம், மொழி, ~~கலாச்சாரம்~~ பண்பாடு என்று வாழ்ப்புக்கள் போட்டு அடக்குமுறைக்குள்ளாக்கப்படும் வர்க்கங்களைப் பிரித்து, அவர்களிற்கிடையில் போட்டி பூசல்களை உருவாக்கிவிட்டு, தங்களது அதிகாரத்தை மிகவும் ஆனந்தமாகவே நடாத்திச் செல்கின்றன; 'எல்லா மக்களும் சமமே' மதங்கள் இவற்றையே கூறுகின்றன. 'கொலை செய்வது பாவம்' என்கின்றன: அதேசமயம் இவர்களது அக்கிரமங்களைப் பொறுக்கமாட்டாது சீறியெழும் மக்களை ஈவிரக்கமின்றிச் சுட்டுக் கொல்லுகின்றார்கள்; தூக்குமேடைகளில் தொங்கவிடுகின்றார்கள்; அப்பொழுது இவர்களது தத்துவமெல்லாம், கோட்பாடுகளெல்லாம் எங்குதான் போய் ஒளிந்தன? 'எதிரியையும் மன்னித்துவிடு என்றல்லவா' இந்த மதங்கள் கூறுகின்றன, 'ஒரு கன்னத்தில் அறைந்தவனிற்கு இடது கன்னத்தையும் காட்டு என்றல்லவா' இவர்கள் கூறும் மதங்கள் போதிக்கின்றன. 'பொறுமையையும், சகிப்புத் தன்மையையும்' எல்லா இந்த மதங்கள் கைக்கொண்டொழுகும்படி வேண்டுகின்றன. அதேசமயம் இந்நாடுகளில் உள்ள மதவாதிகளும் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் அடிவருடிகளாகத் தானிருக்கின்றார்கள்? (ஒரு சிலர் தவிர). உதாரணமாக சின்னஞ்சிறிய இலங்கைத் தீவினையே எடுத்துக் கொள்ளுங்கள்; காருண்யம் பற்றிப் போதிக்கும் புத்த பகவானின் சீடர்கள், தமிழ், சிங்கள இனக்கலவரங்களின் போது எத்தனையோ அப்பாவிகள் கொல்லப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்டு, எத்தனையோ பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டு, கொல்லப்பட்டு, குழந்தைகள் கொதிக்கும் தார்ப் பீப்பாய்களில் போடப்பட்டு, மனிதர்கள் மிகக் கேவலமாக நசுக்கப்பட்ட வேளைகளிலெல்லாம் மௌனமாக வாய்மூடியிருந்த இந்த சீடர்கள், அடக்குமுறைகளைப் பொறுக்க மாட்டாத இளைஞர்கள் அவலாயத்திற்கெதிராகக் கிளர்ந்தெழுகையில் தான் மெல்லத் தங்கள் திருவாய்களைத் திறந்து விடுகின்றார்கள். புத்த பகவானின் போதனைகளை மடை திறந்த வெள்ளமெனத் திறந்து விடுகின்றார்கள். அதேசமயம் இனக்கலவரங்களின் போது கொடூரம் புரிந்த குண்டர்களெல்லாம், வெளியில் வெகு ஆனந்தமாகவே 'கப்பு' அடித்துக் கொண்டும், 'சந்தோ'வில் பிதற்றிக் கொண்டும் பாடித் திரிகின்றார்கள்.

ப.ஜ. க)

'பண்பாடு. ஒழுக்கம். கற்பென்று'

இம்மதவாதிகள் தான் கிராமம் கிராமமாக ஏழை எளிய மக்களிடத்து சென்று போதிக்கின்றார்கள். ஆனால் இவ்வறிய மக்கள் ஏன் இத்தகைய நிலைக்குத் தள்ளப்பட்டார்களோ, அந்தக் கொடிய வறுமைக்குக் காரணமான இந்த ஆளும் சுரண்டல் வர்க்கங்களைப்பற்றி வாய்திறந்து கூட இவர்கள் பேச விடமாட்டார்களே. ஆனால் இந்த வறிய மக்களோ வறுமையின் காரணமாக முறை தவறி நடக்கின்றார்கள். கொலை, கொள்ளை போன்றவற்றிலும் ஈடுபட நிர்ப்பந்திக்கப் படுகின்றார்கள். ஆனால் இந்தக் கொழுத்த முதலாளித்துவ வர்க்கத்தினரின் வாழ்க்கையை உற்றுப் பாருங்கள்: ஐம்பது ரூபாய் அல்லது ஒரு ஐந்து ரூபாய் திருடியதற்காக ஒரு ஏழை அபலையாகத் தண்டிக்கப்படுகின்றான்; அதே வேளை இந்த முதலாளித்துவ வர்க்கத்தினரோ வெகு அநாயாசமாக கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான கொள்ளைகளை கள்ளக் கடத்தல்கள் மூலம் நடாத்துகின்றார்கள். ஒரு ஏழை ஐந்து ரூபாய் வைத்துச் சூதாடியதற்காக சிறை செல்கின்றான். ஆனால் இவர்கள் செல்லும் ஹோட்டல்களிலோவெனில் சூதாட்டம் சர்வ சாதாரணம். ஒரு ஏழைப் பெண் வறுமையின் காரணமாகத் தன்னுடல் விற்பதற்குக் கண்ணீருடன் நிர்ப்பந்திக்கப் படுகின்றாள். ஆனால் அதே சமயம் விபச்சாரக் குற்றம் சாட்டப்பட்டு சீரழிகின்றாள். ஆனால் இத்தகைய ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலோவெனில் விபச்சாரம் சாதாரணமாகவே அனுமதிக்கப்படுகின்றது. ஏழைகளாவது வறுமையின் காரண[மாக] இத்தகைய செயல்களைச் செய்கின்றார்கள். ஆனால் இத்தகைய செயல்களை எதற்காக இந்த முதலாளித்துவ வர்க்கத்தினர் செய்கின்றார்கள்? கேவலம் நிலைகெடுக்கும் தங்கள் உடல் ஆசைகளை, மோகங்களைத் தணிப்பதற்காகவல்லவா?

'ஒழுக்கம், கற்பு' பற்றியெல்லாம் கிராமம் கிராமமாகச் சென்று கண்ணீர் வடிக்கும் இந்த மதவாதிகள் ஏன் இந்த முதலாளித்துவ வர்க்கத்தினரின் கேவலமான லீலைகளைப்பற்றி எதுவும் சொல்வதில்லையே? ஏன்? ஏனெனில் ஏழைகளிடம் என்ன சொன்னாலும் இவர்களிற்கு எதுவித அபாயங்களும் ஏற்பட்டு விடப் போவதில்லை; ஆனால் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தாரை அம்பலப்படுத்திவிடின், இவர்களால் நிம்மதியாக வாழ முடியுமா என்ன? அதுதான் காரணம். ஏனெனில் அறியாமையிலிருந்த அப்பாவி ஏழை மக்களிடத்திலுள்ள மத உணர்வுகளைத் திறமையாகவே பாவித்து, அவ்வேழைகளின் கவனத்தினைப் பிரச்சினைகளிலிருந்து வேறுபக்கம் திருப்புவதன் மூலம் ஆளும் முதலாளித்துவ வர்க்கங்களின் 'கேவலமான அடியாட்களாகத்' தான் இந்த மதவாதிகள் செயற்படுகின்றார்கள். அதுதான் சரியான நிலைமை.

இதனால் தான் கார்ல்மாக்ஸ், பிரடெரிக் ஏங்கெல்ஸ் போன்றவர்கள், ~~அவர்கள்~~ அவ்வளவு ஆக்ரோஷமாக இந்த மதவாதிகளையும், மதத்தினையும் எதிர்த்தார்கள்? அடக்குமுறைகளை

ஒடுக்கப்பட்டு, 'எல்லாம் அவன் செயல்: இது எம் தலைவிதி' என்ற மனப்பான்மையில் தாழ்ந்து கிடக்கும் அப்பாவித் தொழிலாளர்களிடையே பரவிக்கிடந்த 'மதமாயை'யினை அவ்வளவு ஆவேசமாக அன்று எதிர்த்தார்கள். தொழிலாளர்கள் தங்கள் நிலையினைச் சரியாகவே உய்த்துணர்வதற்கு அன்றைய நிலையில் 'மதமாயையிலிருந்'து விடுபட்டு வெளியே வரவேண்டிய நிலையிலிருந்தார்கள். ஏனெனில் அன்றைய நிலையில் 'பொதுவுடைமைத் தத்துவம், பாட்டாளிவர்க்க ஆட்சி' என்ற கோட்பாடு முதன் முறையாக இவ்வுலகில் முன்வைக்கப்பட்டது. அச்சமயம் அது மிகப்பலமான எதிர்ப்புக்களை பிற்போக்குவாதிகளிடமிருந்து எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அச்சமயங்களிலெல்லாம் பிற்போக்குவாத ஏகாதிபத்திய அரசுகளெல்லாம் மதவுணர்வின் மூலமே அப்பாவி ஏழைகளை மேலும் மேலும் அடக்குவதற்கு முயன்றன. இந்நிலையில் இப்புதிய கோட்பாடு வெற்றி பெறவேண்டுமானால் அது தர்க்கரீதியாக பல எதிர்ப்புக்களை மதவாதிகளிடமிருந்து பெறவேண்டியிருந்தது.

இப்புதிய கம்யூனிசக் கோட்பாடு, நவீன விஞ்ஞானத்தில் ஏற்பட்ட வெற்றிகளின் விளைவாக, பரிணாமக் கோட்பாட்டின் விளைவாக உருவானதொன்று. ஆனால் அறியாமை மண்டிக்கிடக்கும் மதங்களோவெனில் பரிணாமப் போக்குகளின் எதிரியாகவிருந்தது. இம்மானுட சமுதாய வரலாற்றில் நிலவும் சமுதாய அமைப்புக்கள், புதிய புதிய வாழ்நிலைகளிற்கேற்ப மாறிக்கொண்டே செல்லும் தன்மை வாய்ந்தன; ஒரு காலத்தில் நிலவிய நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பு எவ்வாறு இன்னொரு சமயம் முதலாளித்துவ சமுதாயத்திற்கு வழிவிட்டு ஒதுங்கியதோ, அவ்வாறே முதலாளித்துவ சமுதாயமும் இன்னுமொரு சமயம் கம்யூனிச சமுதாயத்திற்கு இடம்விட்டு ஒதுங்கிச் செல்லும். ஆனால் இத்தகைய மாற்றங்கள் இயல்பாக ஏற்பட்டு விடுவன அல்ல; மாறாக புரட்சிகளின் மூலமே உருவாகின்றன. ஏனெனில் ஒரு சமுதாய அமைப்பு இருக்கும் இடத்தில் அதற்கு முற்றிலும் மாறுபட்ட சமுதாய அமைப்பொன்று வருகையில், முன்னைய சமுதாய அமைப்பின் மூலம் பயன்பெறும் வர்க்கம் மிக இலகுவாக அதன் பிடியினை விட்டு ஒதுங்கிவிடாது. எனவே புதிய சூழ்நிலைகள் இயல்பாகவே 'புரட்சிகளை' உருவாக்கி வைக்கின்றன. இவையெல்லாம் சமுதாய வரலாற்றின் பரிணாமப் போக்குக்களே' என்ற மார்க்சீயவாதிகளின் கூற்றுகளிற்கு எதிராக இம் மதவாதிகள் கூறியதென்ன; அவர்கள் இந்தப் பரிணாமக் கோட்பாடுகளையே மறுத்தார்கள். ஏழை, பணக்காரன் என்பவர்கள் அவரவர் பாவங்களிற்கேற்ப வந்து பிறப்பவர்கள் என்கின்றார்கள். இவர்களது கூற்றுக்களெல்லாம் தர்க்கரீதியற்று வெறும் நம்பிக்கையொன்றின் அடிப்படையிலேயே உருவானவை. ஆனால் அதே சமயம் இந்த மதவாதிகளது வாழ்க்கை வேறு சொல்வதொன்று, செய்வதொன்றாக, இரட்டைவேடம் மிக்கதாகத்தான் விளங்குகின்றது.

இந்த மதவாதிகளின் முரண்பாடான கூற்றுக்களி

-ற்காகத் தான், இந்த மதவாதிகளின் ஒருபக்கச்சார்பான கூற்றை காரணமாகத் தான், இம் மதவாதிகளின் இரட்டை வேடப் போக்குக் காரணமாகத் தான், மார்க்ஸியவாதிகள் இம் மதவாதிகளைக் கடுமையாகச் சாடுகின்றார்கள்; இம்மதங்களின் மூடத்தனமான கொள்கைகளைத் தான் மார்க்ஸியம் வெகு தீவிரமாக எதிர்க்கின்றது.

மார்க்ஸியம் இயற்கையையே கடவுளாகக் கருதுகின்றது. ஆதியும், அந்தமுமற்ற இவ் இயற்கையில் எல்லாமே ஒருவித ஒழுங்குகளின் போக்குகளிலேயே இயங்கின்றன. மனிதனை சிந்தனை வளர்ச்சி மூலம், விஞ்ஞானரீதியாக இவ் இயற்கையின் இதயம் ஒவ்வொரு செயல்களையும், இயக்கங்களையும் அது அவதானிக்கின்றது, நோக்குகின்றது.

ஆனால் இந்த மதவாதிகள் என்ன சொல்கின்றார்கள்? நவீன இயற்கை விஞ்ஞானத்தின் வெற்றிகளை சுகித்துக் கொண்டே, அவர்கள் விஞ்ஞானத்தை இகழ்ந்து கொள்கின்றார்கள்.

இந்த மதவாதிகள் கூறுகின்றார்கள்? "இவ்வுலகினைக் கடவுள் படைத்தார்; ஒவ்வொரு மனிதனதும் வாழ்க்கை அவன் தலைவிதிக்கேற்பவே நிர்ணயிக்கப் படுகின்றது. யாவரும் சோதரரே. அன்பு. அன்பு." இவ்வாறெல்லாம் அது இதென்று பலவாறாக இவர்கள் கூறுகின்றார்கள்.

ஆனால் ஒரு மனிதன் இவர்களது போதனைப் படி நடப்பானென்றால் நடப்பதென்ன? இவர்களது கூற்றின்படி ஏழைகள் தங்கள் துயரங்களையெல்லாம் பொறுத்துப் பொறுத்து ஏங்கிட வேண்டும். ஆனால் பலவித அநியாயங்களைப் புரியும், ஒரு சிறிய முதலாளித்துவ வர்க்கம் தனைப் பாதுகாக்கும் இச் சூதான அமைப்பு பாதுகாக்கப் படவேண்டும்.

ஆனால் மார்க்ஸியவாதிகள் கூறுவதென்ன? "இயற்கையே கடவுள்; ஆதியும் அந்தமுமற்ற இயற்கையில் இருந்து உருவானவையே எல்லாம். இவ் இயற்கையில் ஒவ்வொன்றுமே மாறிக் கொண்டுதானிருக்கின்றன. எவையுமே நிலையற்ற இவ்வுலகில் இம் மாறும் இயல்பு மட்டுமே நிலையான தொன்றாகிவிட்டது.

மதங்கள் கூறுவதைப் போல் இன்றைய பாருலகத்தின் சகலபிரச்சினைக்கும் காரணம் கடவுளல்ல. மாறாக அறியாமையிலிருந்து உருவான மனித வரலாற்றில் கடந்த காலங்களில், மனிதனால் உருவாக்கப்பட்ட பிரச்சினைகளே இன்றைய சகல பிரச்சினைகளும். மனிதன் உருவாக்கிய பிரச்சினைகளை மனிதனே நிவர்த்தி செய்விக்க வேண்டும். அதைவிட்டு விட்டு கடவுளிடம் பழியினைப் போடுவதால் உண்டாவது எதுவுமேயில்லை." இவ்வாறும் மார்க்ஸியவாதிகள் கூறுகின்றார்கள்.

இவற்றிலிருந்து தெரிவதென்ன? மதவாதிகள், இயற்கைக்கும்மேலான, தனித்த ஒரு சக்தியினைப் படைப்பதன் மூலம்,

எல்லாப்பிரச்சினைகளையும் அதாவது இன்றைய சமூகப்பிரச்சினைகளையும் 'கடவுளின்' தலையில் சுமத்திவிடுவதன் மூலம், சமகாலப்பிரச்சினைகளில் முகங் கொடுப்பதனின்றும் தத்துவார்த்த ரீதியில் மட்டுமே தப்பித்துக் கொள்ளுகின்றார்கள். ஆனால் நடைமுறையிலோ அவர்கள் ஆளும் சிறுபான்மை வர்க்கங்களின் கைக்கூலிகளாக, அடிவருடிகளாகவேயிருக்கின்றார்கள் என்பதையே ஆரம்பத்தில் கண்டோம்.

ஆனால் மார்க்ஸிய வாதிகளோவெனில் மதசம்பந்தமான கோட்பாடுகளையெல்லாம் அதாவது பிற்போக்குத் தனமான அதன் கோட்பாடுகளையெல்லாம் ஒரு ஓரமாகத் தூக்கி எறிந்துவிட்டு, நடைமுறைப் பிரச்சினைகளில் நேரடியாக முகம் கொடுத்துப் போராடுவதோடு, தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றார்கள். எல்லாவிதமான மூடநம்பிக்கைகளையும், அநீதிகளையும் இவர்கள் மிகவும் ஆவேசமாகவே எதிர்க்கின்றார்கள்.

இந்த மார்க்ஸியவாதிகளை ஒடுக்குவதற்காக இந்த முதலாளித்துவக் கும்பல் உருவதோமென்னவெனில்; 'நாத்திகவாதிகள்' 'இரத்த வெறியர்கள்' (ஏனெனில் புரட்சியை ஏற்பவர்களல்லவா) . ஆனால் உண்மையில் இந்த குற்றச்சாட்டுகளுமே, அறியாமையில் உழன்று கிடக்கும் வறுமையில் வாடும் மானுட வர்க்கம் தன்னை அறிந்து கொள்ளாதிருப்பதற்கு, மார்க்ஸியம் அவரைச்சென்றடைந்து விடாதிருப்பதற்கு பெரும் தடையரண்களாகத் தானிருக்கின்றன. ஏனெனில் கொடிய அடக்குமுறைகளிற்குள் உழன்று வாடுவதிலும் இவ் ஏழ்மை படர்ந்த மானுட வர்க்கத்தின் இயல்பாகவே மதவுணர்வுகள் பிடித்து விடுகின்றன. கஷ்டங்களால் பாதிக்கப்பற்றிருக்கும் அவர்தம் இதயத்திற்குச் சிறிதளவு சாந்தியை இம் மதம் அவர்களிற்குத் தந்து விடுகின்றது; எவ்வாறு கள் தற்காலிகமாக மகிழ்வினைத் தருகின்றதோ, அவ்வாறே இம் மதமும் அவர்களிற்குத் தற்காலிக நிம்மதியினைத் தந்து விடுகின்றது.

இதனால் மார்க்ஸியவாதிகளை 'நாத்திகவாதிகளென்று' உருவகிப்பதன் மூலம் பெரும்பான்மை வர்க்கமான இவ்வறிய மக்களிடமிருந்து பிரித்துவைப்பதில் இம்முதலாளித்துவக் கும்பல் தற்காலிகமாக வெற்றியடைந்துள்ளது; 'பலாத்காரவாதிகள், இரத்தவெறியர்கள்' என்ற குற்றச் சாட்டின் மூலம், மார்க்ஸியவாதிகளை பொதுவாக பயந்து பயந்து வாழும் அப்பாவி மக்களின் கண்களில் கொடிய அரக்கர்களாக உருவகிப்பதன் மூலமும் தற்காலிக வெற்றிகளை இம் முதலாளித்துவ வர்க்கம் அடைந்து விட்டுள்ளது. இதற்கு அவற்றின் பிடியிலுள்ள வெகுஜனதொடர்புச் சாதனங்களான வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சிப்பெட்டிகள் பெரிதும் கைகொடுக்கின்றன.

எனவே முதலில் 'மார்க்ஸியம்' இம் மானுட வர்க்கத்தினிடையே நன்கு விளங்கிக் கொள்ளப் படுதற்கு, மேற்கூறப்பட்ட இக்குற்றச்சாட்டுக்களுமே உடைக்கப்பட்டிடல் வேண்டும்.

—

121

135)

131) 29.12.82

அத்தியாயம் இரண்டு:- "மார்க்சியமும் அதன் மீதான நாத்திகம், பயங்கரவாதப் பற்றிய குற்றச்சாட்டுக்களும்."

மார்க்சியவாதிகள் 'கடவுள் இல்லை' என்று கூறுகின்றார்கள். கடவுளை நம்பாத அவர்கள் மிகவும் பயங்கரமானவர்கள். ஆக மார்க்சியம் மிகவும் பயங்கரமானதொரு தத்துவம். இவ்விதமாகப் பல படித்த அறிவிலிகளே சிந்திக்கின்றார்களென்றால், பாமர ஜனங்களைப் பற்றிச் சொல்வானேன். உண்மையில் சொல்லப் போனால் மார்க்சியத்தைப் பற்றியோ அல்லது மார்க்சியவாதிகளைப் பற்றியோ கவலைப்படுவதில்லை. அவர்களது கவலைகளெல்லாம் அன்றாடப் பிரச்சினைகளைப் பற்றித்தான். ஒருவேளை உணவைப்பற்றிய பிரச்சினையே பெரிய பிரச்சினை.

தற்போதைய நிலையில் முதலாளித்துவத்தின் கோரப் பிடிகளிற்குள் சிக்கிக் கிடக்கும் பாட்டாளி வர்க்கத்தினைக் காக்கக் கூடிய ஒரேயொரு புரட்சிகரத் தத்துவம் 'மார்க்சியத் தத்துவம்' மட்டுமே. ஆனால் மார்க்சியம் யாரைக் காப்பதற்காக உருவானதோ, அந்தப் பாட்டாளி மக்கள் இந்தப் போதனைகளையெல்லாம் உணரக் கூடிய நிலையில் இல்லை. ஆனால் உறுதியான, தர்க்கரீதியாக விளங்கப்படுத்தினால் உணரக்கூடிய நிலையிலிருப்பவர்கள் ஓரளவு படித்த இளைஞர்கள், யுவதிகள், முதியவர்களே. இத்தகையவர்களே மார்க்சிய போதனையினை விளங்கக் கூடிய நிலையில் இருப்பவர்கள். ஆக இத்தகையவர்கள் உணர்வதற்கு மார்க்சிய விஞ்ஞானத் தத்துவம் தெளிவாக விளங்கப்படுத்தப் படவேண்டும். அதேசமயம் பாமர ஜனங்களின் மத்தியில் அவர்களிற்கேயுரிய மொழியில் முதலில் அவர்களை தங்கள் நிலைமையினை உணரும்படிச் செய்திடவே வேண்டும். அவர்களிற்குத் மூலத் தத்துவங்கள் தற்போதைய நிலையில் தேவையில்லை. ஆனால் அடக்குமுறைகளிற்கு தாங்கள் எவ்வெவ் வகைகளிலெல்லாம் ஆளாகின்றோம் என்பதை அவர்கள் உணர்ந்தால் அது போதுமானது.

இதற்கு 'கடவுளைப்' பற்றிய தங்களது முடிவுகளையெல்லாம் ~~மா~~ அவர்கள் மேல் திணிக்கத் தேவையில்லை. மாறாக அவர்களிற்கு எதிராக எவ்வெவ் வகைகளிலெல்லாம் மதக் கோட்பாடுகள், மதவாதிகள் செயற்படுகின்றார்கள் என்பதை அக்குவேறு, ஆணிவேறாகப் புட்டுப்புட்டு வைத்தால் அது போதுமானது. மார்க்சியவாதிகள் மதங்களிற்கு எவ்வகையிலும் எதிரிகளல்ல என்பதனையும், அவ் அப்பாவி மக்களிற்கு எதிராக இருக்கும் மூடத்தனமான கோட்பாடுகளிற்கு மட்டுமே எதிரிகள் தாம் என்பதனையும் மிகவும் தெளிவாகவே விளங்கப் படுத்திக் கொண்டிட வேண்டும். இல்லாவிடின் மார்க்சியம் மக்களிடமிருந்து அந்நியப்பட்டு விடும் ஆபத்துருவாகிடும்.

அதேவேளையில் மார்க்சியவாதம் ஒரு நாஸ்திகவாதமல்ல என்பதனையும் அது ஒரு விஞ்ஞானத் தத்துவம் என்பதனையும் எவ்வளவு எளிமையாக விளக்க முடியுமோ அவ்வளவு எளிதாக விளங்கப்படுத்திட வேண்டும்.

136)

இவ்வியற்கைக்கும் மேலாக ஒரு சக்தி இருக்கின்றதென்பதை விஞ்ஞானம் புலப்படுத்தினால் அதனை நிச்சயம் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள், சந்தேகத்திற்கிடமின்றி. தற்போதைய நிலையில் மார்க்சியம் அத்தகையதொரு சக்தியைப்பற்றி அதிகம் அலட்டிக் கொள்வதில்லை; ஏனெனில் அத்தகைய சக்திகளை மட்டுமே நம்பும் மெய்வாதிகளால் அல்லது மகான்களால் தற்போதைய பெரும்பாலான வறிய மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முடியவில்லை; ஆனால் அத்தகைய மக்களின் பொருளியல் ரீதியிலான பிரச்சினைகளை மார்க்சியம் தீர்த்துவைத்துள்ளதை மாபெரும் அக்டோபர் புரட்சி உறுதிப்படுத்தி விட்டதால் தான், விஞ்ஞானரீதியாக, தர்க்கரீதியாகச் சிந்திக்கும் எவருமே மார்க்சியதத்துவத்தினை ஏற்றுக் கொள்கின்றார்கள்.

உண்மையில் மார்க்சியம் கூறுவது தான் என்ன?

தற்போதைய நிலைமையில் பெரும்பாலான ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான தொழிலாளர்கள் தங்கள் உழைப்புச் சக்தியை விற்றுக் கொண்டு அதேசமயம், வறுமையின் கோரப்பிடிகளிற்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கையில், எவ்வித உழைப்புமின்றி, ஒரு சில முதலாளிவர்க்கம் இவ் அப்பாவிகளைச் சுரண்டிச் சுரண்டிக் கொழுத்து பெருமளவு பணத்தை ஒரு சில கைகளில் முடக்கிக் கொண்டு, சொகுசுபோக வாழ்வு நடத்துகின்றது.

ஒருபுறத்தில் லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்கள் வாழ்வதற்குரிய அடிப்படை உரிமைகளை மறுக்கப்பட்ட நிலையில், கல்வி, உணவு, இருப்பிடம், சுகாதாரம் முதலிய, கேவலம் அடிப்படை உரிமைகளே மறுக்கப்பட்ட நிலையில், ஒவ்வொரு நாளுமே ஒரு போராட்டமென வாழ்ந்து கொண்டிருக்கையில், இன்னொரு புறமோ கேவலம் ஒரு சிறுகூட்டம் தேவைக்கு மிஞ்சி மிகப் பிரமாண்ட அளவில், என்ன செய்வதென்று தெரியாமல் செல்வத்தைத் தேக்கி வைத்துக் கொண்டு ஊதாரித்தனமாகச் செலவிட்டுக் கொண்டும், காமக் கேளிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டும், இவ் அப்பாவிகளைச் சுரண்டி தர்பார் நடாத்துகின்றது. போதாக்குறைக்கு இம்மக்களின் அறியாமையைப் பாவித்து, இனம் மதம் மொழி, சாதி என்று பிளவுகளை ஏற்படுத்தி, அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் ராஜதர்பாரை நடாத்திக் கொண்டிருக்கின்றன.

இவர்களின் இத்தகைய தான்தோன்றித்தனமான போக்கினால் ஒவ்வொருநாளும் எத்தனை பட்டினிச் சாவுகள், நோய்ச்சாவுகள், தற்கொலைகள், மோதல்கள், கொள்ளைகள், கொலைகள் எல்லாம் நடைபெறுகின்றன. மறைமுகமாக இவற்றிற்கெல்லாம் காரணமான கொலைகாரர்கள் இந்த சில முதலாளித்துவ வர்க்கக் கூட்டத்தாரல்லவா.

இத்தகைய 'முதலாளித்துவ சர்வாதிகார

131 (137)

அமைப்பினைத் தான் இவர்கள் ஜனநாயக அமைப்பென்று புகழாரமிசைத்துடன் உயிர்க் கொள்கின்றீர்கள். ஆனால் மார்க்சியம் கூறுவதோ என்னவெனில், இடித்து நாமும் இத்தகைய அக்கிரமமான முதலாளித்துவ சர்வாதிகாரத்தினிடத்தே, நீதியான பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தினைக் கொணர வேண்டுமென்கின்றார்கள். 'புரட்சி புரட்சி, அநியாயமாக மனித உயிர்களைப் பறிப்பதா' என்று 'புரட்சியின் பாடி நீலிக் கண்ணீர் வடித்திடும் முதலாளித்துவ முதலைகள், 'மார்க்சியவாதிகளைப் பயங்கரவாதிகளென்றும், இரத்த வெறியர்களென்றும்' வர்ணித்திடும் இந்த முதலாளித்துவ முதலைகள் ஒன்றினை உணர்வார்களா? அது:-

இந்த முதலாளித்துவ சர்வாதிகார அமைப்பினைக் காப்பதற்காக இவர்களது கூலிப்பட்டாளங்கள் நாள்தோறும் விடுதலை வீரர்களைக் கொன்று குவிக்கின்றார்களே, சித்திரவதை செய்கின்றார்களே, அது பயங்கரவாதமல்லவா? இரத்தவெறியர்களின் அக்கிரமமான செயல்களல்லவா? இவை கொடியவான அடக்குமுறைகள்.

இந்த முதலாளித்துவ சர்வாதிகார அமைப்பினை 'ஜனநாயகம்' அது இதென்று புகழாரமிசைக்கின்றார்களோ, அவ் அமைப்பின் காரணமாக ஒவ்வொருநாளும் எத்தனையோ குழந்தைகள், தாய்மார்கள், தந்தைமார்கள் பட்டினியால், நோயால், மடிகின்றனவே; இன்னும் பல உயிர்கள் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு சிறைகளில் மடிகின்றனவே. நாள்தோறும் எத்தனை உயிர்கள் வறுமை காரணமாகத் தற்கொலை செய்து கொள்கின்றன. இதே சமயம் இன்னும் எத்தனை உயிர்கள், விபத்துக்கள், பாம்புக்கடி போன்றவற்றில் அகப்பட்டு, உடனடி வைத்திய வசதிகளற்ற நிலையில் மடிந்துவிடுகின்றன. இது தவிர இன, மொழி, மதக் கலவரங்களால் மடியும் உயிர்கள் தான் எத்தனை.

[இது மட்டுமா இவ் அமைப்பின் காரணமாக இளைஞர், யுவதியர் கல்வி கற்க வேண்டிய வயதில் வாழ்க்கை வண்டியை இழுக்கத் தொடங்கிவிடுகின்றார்கள். பூசிக்கப்பட வேண்டிய பெண்மையோ வெளிப் புகுதியிலே சீரழிகின்றது.]

இத்தகைய உயிர்களின் அழிவுகளிற்கெல்லாம் காரணமான 'இந்த முதலாளித்துவ சர்வாதிகார' அமைப்பல்லவா இரத்தவெறி பிடித்த பயங்கரப் பிசாசு; பயங்கரவாத அமைப்பு.

இத்தகைய கேடுகெட்ட அமைப்பினை ஒழித்துவிட மார்க்சியம் முற்படுவதைத் தான் இந்த முதலாளித்துவக் கும்பலும், இதன் கூலிப் படைகளும், அடிவருடிகளும் 'ஜனநாயகத்திற்கே ஆபத்து' என்று கூக்குரலிடுகின்றன. தங்களிற்கு ஆபத்து என்பதைத்தான்

இந்தப் 'பலாத்காரவாதிகள்', 'இரத்த வெறியர்கள்' திரித்து 'ஜனநாயகத்திற்கே ஆபத்து' என்று தூற்றி வைக்கின்றார்கள். இத்தகைய கேடுகெட்ட முதலாளித்துவ அமைப்பு, சிந்திக்கும் ஆற்றல் பெற்ற, நாகரீகத்தின் உச்சியிலிருப்பதாகக் கூறிக் கொள்ளும் மானுட வர்க்கமே காறித்துப்பட வேண்டியதொரு அமைப்பாகும்.

மார்க்ஸியம் இன்றைய மனிதனின் புற உலகைப் பற்றிய பிரச்சினைகளில் மட்டும் தானே கவனம் செலுத்துகின்றது: உண்மையில் மனிதனின் சகல பிரச்சினைகளிற்கும் காரணம் அவனது அகஉணர்வுகளல்லவா. எந்த நிலைமைகளிலும் மனிதன் தன் மனத்தின் மூலம் சாந்தி பெற்றுவிட முடியாதா? உண்மையில் முதலாளித்துவவர்க்கங்கள் தவறு செய்கின்றனவென்றால், அது அவ்வர்க்கங்களின் இழிய அகஉணர்வுகளாலன்றோ. ஆக, முதலாளித்துவ வர்க்கங்களைத் திருத்தி எடுப்பதன் மூலம் நன்மையினைப் பெறமுடியாதா? என்றும் சிலர் கேட்கின்றார்கள். இதனைத்தான் காந்தியடிகளும், டால்ஸ்டாய் போன்றவர்களும் கூடக் கூறினார்கள். இனி அவற்றைப்பற்றியும் சிறிது ஆராய்வோம்.

அத்தியாயம் மூன்று — மானுடவர்க்கப் பிரச்சினைகளும், அகஉணர்வுகளும் பற்றியதொரு கற்பனாவாதம்.

சிறுபான்மை வர்க்கமான முதலாளித்துவ வர்க்கத்திற்கும், பெரும்பான்மை வர்க்கத்திற்குமிடையில் அதாவது தொழிலாளவர்க்கத்திற்குமிடையில் சமாதானத்தின அல்லது ஏற்கத்தக்க தீர்வொன்றினைப் பற்றிய கற்பனாவாதத்தில் சிலர் மூழ்கியிருக்கின்றனர். காந்தியடிகள், டால்ஸ்டாய் போன்றவர்கள் கூட இத்தகையதொரு மாயையில் தான் மூழ்கிக் கிடந்தனர். ஆனால் இவர்களெல்லாம் எங்ஙனம் இவ்வாறு கேட்க முடியும்?

முதலாவதாக ஒரு சிறு முதலாளித்துவக் கும்பல், பெரும்பான்மை வர்க்கமான தொழிலாள வறிய மக்களை அடக்கியாள்வதே மிகவும் கொடூரமானதொன்று. அதேவேளை அவ்வளவோடு நின்று விடாமல், இப்பாட்டாளிகளை மேலும் மேலும் சுரண்டிவரும் இந்த முதலாளித்துவ வர்க்கத்துடன் எதற்காக பெரும்பான்மைவர்க்கமான தொழிலாள வர்க்கம் சமாதானம் செய்து கொள்ளவேண்டுமாம்? அவர்களது வாழ்நிலைகளை மேலும் மேலும் சிதைப்பவர்களுடன், இவர்களை உரிமைகளையே மறுப்பவர்களுடன், இதற்குமேலாக தார்மீக ரீதியில் ஆட்சிபீடத்திலிருப்பதற்கே அருகதையற்றவர்களுடன் அதாவது இந்த முதலாளித்துவ வர்க்கத்துடன் பெரும்பான்மை வர்க்கமான பாட்டாளிவர்க்கம் எதற்காக சமாதானம்

செய்து கொள்ள வேண்டுமாம்? மாபெரும் மகாத்மாக்களெனப் போற்றப்பட்ட காந்திய–களின் சிந்தனையில் உள்ள முரண்பாட்டையே அவரது கற்பனாவாதத் தத்துவமான 'காந்தீயம்' காட்டி நிற்பதை இன்றைய பாரதமே வெளிக்காட்டும்.

ஆக முதலாவதாக முதலாளித்துவ வர்க்கத்துடனான உடன்பாடு எதும் பேச்சுக்கே இடமில்லை. அச்சிறுவர்க்கத்தினரின் செயல்களிற்கு அவர்களது முரண்பாடுகளை விளைத்த அக உணர்வுகள் காரணமாகவிருக்கலாம். அதுபற்றி யாரிற்குக் கவலை வேண்டும். அவர்களது அக உணர்வுகள் மற்றையோரிற்கு இடைஞ்சலாக இல்லாதிருப்பின் அதுவே போதும். ஆனால் உண்மையில் கவலைப்படவேண்டியது யாருடைய அக உணர்வுகளைப் பற்றி? வறுமையில், பசிப்பிணியில் உழன்று கொண்டிருக்கும் பெரும்பான்மை வர்க்கமான ஏழை தொழிலாள வர்க்கத்தினரின் அக உணர்வுகளைப் பற்றியல்லவா?

ஒரு சிறு முதலாளித்துவ வர்க்கத்தினைப் புரட்சி தாக்கியெறிந்து விடுமேயென்று கவலைப்படும் இத்தகைய தத்துவ மேதைகள், ஏமாற்றும், வஞ்சகமும் படர்ந்த இக்கொள்ளைக்காரக் கும்பலின் அக உணர்வுகளைப் பற்றிப் பெரிதாகக் கவலைப்படும் இத்தகைய தத்துவமேதைகளின் தத்துவங்கள் நிச்சயம் உளமுற்றவையாகத்தானிருக்க வேண்டும்.

உண்மையில் பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரமானது இவர்கள் எல்லாம் அதாவது முதலாளித்துவ வர்க்கச் சார்பான தத்துவவித்தகர்களெல்லாம் பெரிதாக அலட்டிக் கொள்வது போல முதலாளித்துவ வர்க்கத்தினரின் அடிப்படை உரிமைகளான கல்வி, உணவு, சுகாதாரம், இருப்பிடம் மற்றும் மிக நுண்ணிய மன உணர்வுகள், இன்ப காதல் உறவுகளைவற்றினையும் பறித்து விடுவதில்லை; இல்லாமல் செய்து விடுவதில்லை. அது இல்லாமற் செய்து விடுவதெல்லாம் ஒரு சிறு வர்க்கம் பெரும்பான்மை தொழிலாள வர்க்கமொன்றினைச் சுரண்டிடும் கேடுகெட்ட செய்கையொன்றினைத்தான்; 'தனியுடமை' அமைப்பு முறையினைத்தான். அவ்வளவே. ஆனால் அச் சுரண்டிடும் வாய்ப்பு இல்லாமற் போய்விடுமே யென்ற அற்ப ஆசையினால் தான் இவர்கள் பெரிதாக ஓலமிடுகின்றார்கள்; மார்க்சியத்தின் மேல் ஓங்கி ஓங்கி அறைந்து விடுகின்றார்கள்.

மேலும் இன்னும் விரிவாகவே ஆராய்வோமாயின், முதலாளி என்றொருவனின் சுரண்டல் இருக்கும் வரையில், தொழிலாளர்கள் முதலாளிகள் அல்லது ஏழை பணக்காரனென்ற பேதங்கள் தார்மீகரீதியில் இல்லாதொழிந்து போய்விட வேண்டுமென்றால் ஒரே ஒரு முறையின் மூலம் தான் முடியும்; அது முதலாளிகள் யாவருமே ஒருமித்து தங்கள் சொத்துக்களைப் 'பொதுவுடமை' ஆக்குவதன் மூலம் தற்போதைய 'தனியுடமை அமைப்பினைத் தாங்களாகவே ஒழித்துவிட வேண்டுமென்

-துதான். இது மட்டும் நடைபெற்றுவிடுமென்றால் ஆகா எவ்வளவு அற்புதமாக இருக்கும். ஆனால் இது நடைமுறைச் சாத்தியமானதா? வெறுங்கற்பனவாதமே இது. இத்தகைய சுரண்டிடும் அமைப்பினைக் கட்டிக் காக்கும் பொருட்டு இவ்வளவு ஆக்ரோஷமாகப் போரிட்டுவரும் முதலாளித்துவவர்க்கம் இருக்கும் வரையில் ஒடுக்கப்பட்ட வர்க்கமாகப் பாட்டாளிவர்க்கப் புரட்சியும் தவிர்க்க முடியாததே. உண்மையிலேயே இம்முதலாளித்துவவர்க்கம் சமாதானத்தினை, அமைதியினை விரும்பினால் அதற்கு ஆற்றுதற்குரிய வழிமுறை அல்லது உபாயம் இவர்களிடம் மட்டுமேயுள்ளது. அது எது? அது இதுதான். பேசாமல் தங்களது மூடத்தனமான மற்போக்குத் தனமான கொள்கைகளையெல்லாம் கைவிட்டுவிட்டு, தொழிலாளர் கைகளில் ஆட்சியினை ஒப்படைத்து விடுவதுதான். ஏதாவதொரு அற்புதமொன்றினால் அத்தகையதொரு நிலைமை வரும்வரையில் இத்தகையதொரு புரட்சியும் தவிர்க்க முடியாததே. இத்தகைய புரட்சிகள் உருவாகுதற்கு முக்கிய காரணி இம்முதலாளித்துவவர்க்கமே. எனவே தண்டிக்கப்படவேண்டியவர்கள் முதலாளித்துவவர்க்கமே தவிர வேறெவருமில்லை.

இதனால்தான் கார்ல்மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் போன்றவர்கள் அவ்வளவு தீர்மானமாகப் புரட்சியினை எதிர்வு கூறினார்கள். ஆனால் அதேசமயம் இப்படியொரு கேள்வியும் எழாமலில்லை... அதாவது... லெனின் வாழ்ந்த காலகட்டச் சூழ்நிலையில் வேண்டுமானால் அப்புரட்சி சரியாகயிருக்கலாம்; ஆனால் ஆசியச் சூழல்களிற்குள் மூழ்கிக்கிடக்கும் கீழைத்தேய நாடுகளிற்கு இவையெல்லாம் சரிப்பட்டுவருமா? இப்படியெல்லாம் கேட்கின்றார்கள். இவற்றிற்கெல்லாம் விடைதானென்ன? பெரும்பான்மை, சிறுபான்மை என்று இனமொழி ரீதியிலான முரண்பாடுகள் முற்றிக் கிடக்கும் இலங்கையைப் போன்ற நாடுகளில் இத்தகைய புரட்சிகளெல்லாம் எவ்வாறேற்பட முடியும்? இவ்வாறெல்லாம் கேள்வி கேட்கப்படுகின்றதே. இவைபற்றிச் சிறிது ஆராய்வோமா?

-

அத்தியாயம் நான்கு:- 'புரட்சிகளும், புரட்சிகர, எதிர்ப்புரட்சிச் சக்திகளும். (இலங்கைத் தமிழர் பிரச்சினை உட்பட.)

'புரட்சி' என்றதுமே, ஏதோ கேட்கக்கூடாததைக் கேட்டுவிட்டதைப் போல், சர்வநாசமொன்று இவ்வுலகினையே சூழ்ந்து விட்டதைப் போன்று இந்த முதலாளித்துவ வர்க்கம் நிலைகுலைந்திடத் தொடங்கிவிடுகின்றது. இத்தனைக்கும் இம்மானுடவர்க்கத்தின் வரலாற்றினை உற்றுநோக்குவோமென்றால், மானுடவர்க்கப் புரட்சிகளொன்றும் அன்னியமானவையல்ல என்பது தெரியவரும். ஆதியில் அடிமைகளை உள்ளடக்கியிருந்த சமுதாயத்திலும்

அடிமைகள் புரட்சிசெய்தார்கள்; நிலப்பிரபுத்துவத்தினை எதிர்த்து முதலாளித்துவ வர்க்கம் அன்று புரட்சி செய்தது. நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பு முறையில், ஆளும் வர்க்கமாக நிலப்பிரபுத்துவமே விளங்கியது; அச்சமுதாய அமைப்பு முறையில் 'உற்பத்தி'யெல்லாம் தனிப்பட்ட உழைப்பாளர்களின் திறமையிலேயே தங்கியிருந்தது; ஆனால் விஞ்ஞானவளர்ச்சி இயந்திரங்களைக் கண்டு பிடிக்கவும் உற்பத்தி தனிப்பட்டவர்களின் கைகளிலிருந்து சமுதாயமயமானதிற்குத் தள்ளப்பட்டது. கூலித் தொழிலாளர்கள் உருவானார்கள்; இந்நிலையில் புதிய உற்பத்தி முறைகள் நிலவிய சூழலில், நிலப்பிரபுத்துவ அமைப்பு முறை முதலாளித்துவ வர்க்கத்தினரின் பொருந்தாத நிலையினை வந்தடைந்தது. முதலாளித்துவ புரட்சி மூலம் புதிய சூழ்நிலைகளிற்குப் பொருந்தக் கூடிய முதலாளித்துவ வர்க்கம் ஆட்சிக்கு வந்தது. [இம்முதலாளித்துவப் புரட்சிகளெல்லாம் ஐரோப்பாவில் நிகழ்ந்தன.].

இதேபோன்று தான் இன்றைய முதலாளித்துவ அமைப்புமுறை நிர்மூலமாக்கப்பட்டு அதனிடத்தே பாட்டாளிவர்க்க ஆட்சி முறையும் பாட்டாளிவர்க்கப் புரட்சியொன்றின் மூலமே உருவாகுவது தவிர்க்க முடியாததொரு வழியே.

புரட்சி புரட்சி என்கின்றோமே, அது இருந்தாற் போல் காட்டுத்தீயைப் பற்றிவிடும் ஒன்றா? அல்லது அதனை உருவாக்கும் காரணிகள் எவையாகவிருக்க முடியும்? ரஷ்யாவில் நிகழ்ந்த அக்டோபர் புரட்சியும் சரி, சீனாவில் மாசேதுங்கினால் நிகழ்த்தப்பட்ட சீனப்புரட்சியும் சரி அதனதன் கொள்கைத் திட்டங்களில், நடைமுறைகளில் வெவ்வேறானதாகவேயிருந்த போதும் அவற்றின் குறிக்கோள் பாட்டாளிவர்க்கத்தினரை ஆட்சிபீடத்திலமர்த்தி விடுவதாகவே யிருந்தன.

இத்தகைய புரட்சிகளின் தன்மைகள், அதன் வெற்றி தோல்விகளை அவ்வவ் நாடுகளின் நிலவும் சூழ்நிலைகளே நிர்ணயித்து விடுகின்றன. அந்நாட்டின் காலநிலை, தரை அமைப்பு மற்றும் அங்குள்ள வர்க்கங்களிற்கிடையே காணப்படும் முரண்பாடுகளின் தன்மை, புரட்சிகர சக்திகளைக் கொண்டு நடாத்தும் தலைவர்களின் தலைமைத்துவம் என்பனவே தீர்மானித்து விடுகின்றன.

உதாரணமாக ஒரு முதலாளித்துவ நாடொன்றினை எடுத்துப் பார்ப்போம். அங்குள்ள புரட்சிகரசக்தி அடக்குமுறைகளிற்குள்ளாக்கப்படுவதும் பாட்டாளிவர்க்கமே. புரட்சி எதிர்ப்புச் சக்திகள் முதலாளித்துவ வர்க்கமும், அதன் ஏவற்படைகளுமே. இந்நாட்டில் பாட்டாளிவர்க்கம் ஒரு புரட்சிகர சக்தியாகவிருந்த போதும்,

அம்மக்களைத் தட்டியெழுப்பி வழிநடாத்திச் சென்றிட ஒரு தகுந்த தலைமை உருவாகும்வரை புரட்சிகர சக்திகளான பாட்டாளி வர்க்கம் அறியாமையில் செயலிழந்துதான் கிடக்கும். அதேவேளை இப்புரட்சிகர சக்திகளை ஒன்று திரட்டி வழிநடாத்திச் செல்கையில் எதிர்ப்புரட்சிச் சக்திகள் இயலுமான வரையில் புரட்சியை நசுக்கி ஒடுக்கிடவே முயலும். ஆனால் ஆட்சி மாற்றங்களைச் செய்யும் ஈடுகொடுக்கும் வேளை, எந்தச் சமயத்தில் எதிர்ப்புரட்சிச் சக்திகள் பலமிழந்து கிடக்கின்றனவோ அச்சமயத்தில் தாமதமின்றி புரட்சியை நடாத்திட வேண்டும்; அச்சந்தர்ப்பம் மட்டும் தவறவிடப்படுமாயின், புரட்சி இன்னும் எத்தனையோ பல ஆண்டுகளிற்குத் தாமதப்பட்டு விடலாம்.

இனி இலங்கையினை உதாரணமாக எடுத்துப் பார்ப்போம்; இங்குள்ள வர்க்கங்களிற்கிடையே நிலவிடும் முரண்பாடுகளின் கூர்மை பற்றியும் சிறிதே ஆராய்ந்து பார்ப்போம்.

இலங்கையினைப் பொறுத்தவரையில் இரண்டு பிரதான வர்க்கங்களாக சிங்கள, தமிழ் ~~பாட்டாளி~~ தொழிலாள விவசாயமக்களையும், சிங்கள தமிழ் முதலாளித்துவ வர்க்கமும் விளங்குகின்றன. உண்மையில் புரட்சிகர சக்தியாக சிங்கள, தமிழ் பாட்டாளிகளும், புரட்சி எதிர்ப்புரட்சிச் சக்தியாக சிங்கள, தமிழ் முதலாளித்துவ வர்க்கமுமே விளங்க வேண்டும்.

ஆனால் இப்புரட்சிகர, புரட்சி எதிர்ப்புச் சக்திகள் நாளாந்தமாகவும் மாறுபட்டு காணப்படுதற்கு முக்கிய காரணமாக 'இனப்பிரச்சினை' பூதாகரமானதாக உருப்பெற்று விட்டிருப்பதே காரணமாகும். இது உண்மையில் சிங்கள முதலாளித்துவத்திற்குக் கிடைத்த வெற்றியென்றே கூறவேண்டும். அவர்கள் தங்களது பொது எதிரிகளான சிங்கள, தமிழ்ப்பாட்டாளி வர்க்கங்களிற்கிடையே மோதலை ஏற்படுத்தி, அவர்களைப் பிரித்து வைப்பதன் மூலம் தங்களது எதிரிகளைப் பலவீனப்படுத்தியதன் மூலம் தற்காலிக வெற்றிதனை அடைந்து விட்டார்களென்றே கூறிட வேண்டும்.

(1-1-83) தற்போதைய கேள்வி இதுதான்.

இலங்கையைப் பொறுத்தவரையில் சிங்கள,தமிழ்ப் பாட்டாளிகளின் ஒருங்கிணைந்த புரட்சி சாத்தியமா?

அல்லது சிங்கள தமிழ்ப் பாட்டாளிகளின் தனித்தனியான புரட்சிகள் நடைபெறக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளனவா?

[அது எப்படியிருந்த போதும், இறுதி இலட்சியம் சிங்கள, தமிழ்ப்பாட்டாளிவர்க்கத்தினரின் பொதுவுடைமை சமுதாய அமைப்பாகத் தானிருக்க முடியும்.] மேலுள்ள இரு வினாக்களிற்குமான விடை

-ளைப் பற்றிச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம். அவ்விடைகளே இலங்கை என்ற சிறிய தொட நாட்டின் பல்வேறின மக்களினதும் எதிர்காலத்தின் நிர்ணயிப்பனவாகவிருக்கும்.

அதே சமயம் தமிழ்மக்களைப் பொறுத்த வரையில் இன்னுமொரு கேள்வியொன்றும் எழுந்து வருகின்றது: "தமிழ் மக்களின் அரசியல் விடுதலையே முதலில் உருவாகிட வேண்டும். அதன் பின்பு பொருளாதார விடுதலையினைப் பார்த்துக் கொள்ளலாம் இல்லையா?" இது தான் அந்தக் கேள்வி. இதனைப்பற்றியும் மேற்குறிப்பிட்ட இருவினாக்களுடன் சேர்வாக ஆராய்ந்திட வேண்டும். இன்றைய நிலையில் இவை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கேள்விக-ளாகும்.